**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No.63/2025**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பரமசிவம்** | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : பிச்சைமுத்து | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : அசன்கொடை , வடகவுஞ்சி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 53/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 11.05.2026 |

**( எதிரி மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வடகவுஞ்சியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி நடராஜனைத் தெரியும் . அவரது எனது பக்கத்துத் தோட்டத்தைச் சேர்ந்தவர் . நடராஜனின் தோட்டத்தின் வழியாகத்தான் எனது அக்கா பூதநாச்சி தோட்டத்திற்கும் , வீட்டிற்கும் செல்லும் வழி உள்ளது . 27.07.2025 ம் தேதி நான் எனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனது அக்கா தோட்டத்திற்கு செல்லும் பாதையை நடராஜன் கம்பைக் கொண்டு அடைப்பை ஏற்படுத்திவிட்டார் . அந்த அடைப்பை நீக்கறவு செய்ய எங்கள் ஊர் தலைவர் ராமகிருஷ்ணனை நான் அழைத்துச்சென்றேன். அப்போது எனக்கும் , நடராஜன் மற்றும் நடராஜன் அப்பா மணிகண்டன் மற்றும் நடராஜனின் தம்பி கரியம்மாள் என்பவர்களுடன் வாய்த்தகராறு ஏற்பட்டது . பாதை அடைப்பை நான் எடுத்தபோது நடராஜன் கம்பைக் கொண்டு என்னை தலையில் தாக்கினார் . அதில் எனக்கு உச்ச

தலையின் அருகே வலதுபக்கத்தில் இரத்தம் காயம் ஏற்பட்டது . பிறகு சண்டை சம்பவத்தை கிராமத்து தலைவரான ராமகிருஷ்ணன், எனது அக்கா பூதநாச்சி மற்றும் தங்கம்மாள் ஆகியோர் சண்டையை விலக்கி விட்டார்கள் . சம்பவத்தின்போது நடராஜன், எனது அக்கா மகள் ஜோதி என்பவரையும் நடராஜன் தாக்கினார். மேலும் ஒருவருக்கு ஒருவர் தாக்கிக்கொண்டார்கள் . பிறகு காயமுற்ற நான் தாண்டிக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் . என்னுடன், எனது அண்ணன் வைகுண்டம் துணைக்கு வந்தார் . தாண்டிக்குடி அரசு மருத்துவமனையில் எனக்கு ஏற்பட்ட இரத்தக்காயத்திற்கு தையலிட்டு சிகிச்சை அளித்தார்கள் . மேலும் என்னை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள் . திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் நான் 1 நாள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் . அதன் பிறகு வத்தலக்குண்டு தனியார் மருத்துவமனையில் 15 நாட்கள் புறநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சம்பவம் நடந்து முடிந்தவுடன் மருத்துவமனை செல்லும் முன்பு நான் தாண்டிக்குடி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன் . என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்துதான் . அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**Counsel Mr.S. Murali representing the accused present. Opportunity to cross the witness not availed. Hence cross of PW1 is closed.**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.11 14:50:16 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**
**CC.No.63/2025**
**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ராமகிருஷ்ணன்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : கரியமாள் | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : அசன்கொடை , வடகவுஞ்சி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 57/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 11.05.2026 |

**( எதிரி மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வடகவுஞ்சியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பரமசிவத்தைத் தெரியும் . அவர் எனது ஊரைச் சேர்ந்தவர். எதிரி நடராஜனைத் தெரியும். அவரது எனது ஊரைச் சேர்ந்தவர் . (சாட்சி கையில் எழுதி வைத்திருந்த தேதியை பார்த்து சாட்சியம் அளித்தார் ). கடந்த 27.07.2025 ம் தேதி சுமார் காலை 10.00 மணியளவில் எதிரி நடராஜன் அவரது தோட்டத்தின் அருகே உள்ள பாதையை மறித்து வைத்திருந்ததன் காரணமாக நான் , இலட்சுமி, ஜெயராமன் ஆகியோர் நடராஜனிடம் பேசுவதற்காக சென்றோம் . அப்போது பரமசிவம் பாதை மறைப்பை எடுத்துவிடுமாறும் , பரமசிவம் பாதை வழியாகச் செல்லவேண்டும் என்றுச்சொல்லி எங்களிடம் தெரிவித்தார். அதற்கு நடராஜன் பாதை வழிவிடமுடியாது என்று மறுத்தார். அப்போது பரமசிவம் கம்பியைக் கொண்டு மறைத்து வைத்திருந்த அமைப்பை நீக்கிய போது நடராஜன் கம்பைக்

கொண்டு பரமசிவத்தின் தலையில் தாக்கிவிட்டார் . அதில் பரமசிவத்திற்கு தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டு இரத்தம் வடிந்தது. அப்போது அங்கிருந்து பரமசிவத்தை மருத்துவமனைக்கு வைகுண்டம் துணையுடன் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் . சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**Counsel Mr.S. Murali representing the accused present. Opportunity to cross the witness not availed. Hence cross of PW2 is closed.**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.11 14:50:21 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.